திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் ஒரு விளக்கம். முதலில் நான் எழுந்தபோது சபையில் பரபரப்பான நிலைமை இருந்தது. தவறி எழுந்துவிட்டேன். அதற்காக மன்னிப்புக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிப்புத் தேவை இல்லை. உங்கள் பெயரே கந்தசாமி. ஆகவேதான் பழனியைப்பற்றி கேள்வி கேளுங்கள் என்கிறேன்.

(2) தகவல் கோரல்
பேரவை கூடும் நேரம் குத்திது.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, நேற்றைய செய்தித் தாளில் சட்டமன்றம் இனிமேல் மாலை நேரத்தில் நடக்கவிருக்கிறது என்று தாங்கள் அறிவித்திருப்பதாக அறிகிறேன். இதுபற்றி நான் சில விஷயங்களைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகம். உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல அவசியமும் இருக்கிறது. இப்பொழுது காலை நேரத்தில் சபை இருந்துவருவதால், சட்டசபை நடவடிக்கைகளைக் கவனித்த பின்னர், அரசு அதிகாரிகளைப் பார்த்துப் பேசுவதற்கும், மற்ற அலுவல்கள் காரணமாக அதிகாரிகளைச் சந்திப்பதற்கும் சுலபமாக இருக்கிறது. காலை நேரத்தில் சபை இருப்பதால் அங்கத்தினர்களுக்கு சௌகரியங்கள் அதிகம் இருக்கின்றன. ஆகவே, சபையை வழக்கம்போல் காலை நேரத்திலேயே வைத்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது சட்டப் பேரவை காலையில்தான் நடக்கிறது. நேற்றைய தினம் கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையையும் மாலை நேரத்திலே வைக்கலாமா என்பதைப்பற்றி மேலவையிலே கூறியிருக்கிறார். இது இன்னும் ஆலோசனையிலேதான் இருக்கிறது. எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. சட்டப் பேரவையின் நிகழ்ச்சி நேரம் இப்போது மாற்றப்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு

வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண் சரிவும் அகவிலைப்படி குறைப்பும் அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, "the reduction in dearness allowance to about three lakhs of workers all over Tamil Nadu as a result of the steep fall in the cost of living index and the consequent agitation by all the Trade Unions".

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I also wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, 'the reduction of Dearness Allowances to about three lakhs of workers all over Tamil Nadu as a result of the steep fall in the cost of living index and the consequent agitation by all the Trade unions.'

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, 'the reduction in dearness allowances to about three lakhs of workers all over Tamil Nadu as a result of the steep fall in the cost of living index and the consequent agitation by all the Trade Unions.'

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ்,

"விலைவாசிப் புள்ளி வெகுவாக இறங்கியதன் காரணமாக தமிழ் நாட்டிலுள்ள சுமார் மூன்று லட்சம் தொழிலாளர்களின் பஞ்சப்படி குறைந்துள்ளதும், அதனால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை பற்றிய" அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கான நுகர் பொருள் குறியீட்டு எண் புதிய தொடர் முற்
பிப்ரவரி 1970-லிருந்து அமுலாக்கப்பட்டிருக்கிறது. இக்குறியீட்டு எண் 10–
இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள் நிறைந்த 50 நிலையங்களுக்கும் ஒரே கணிக்கும் முறையைக் கொண்டு அமைந்ததாகும். இந்த வரிசைகளுக்கான அடிப்படை ஆண்டு 1960 ஆகும். தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான குடும்ப வாழ்க்கைபற்றி இந்திய அரசைச் சேர்ந்த தொழிலாளர் நலக் கழகம் நடத்திய ஆய்வு விலை சேகரிப்புக்கான பொருட்கள் பட்டியல், அவற்றின் ரகங்கள், செலவு விகிதம் (Weightage) அங்காடிகள் அமைந்துள்ள இடம் போன்றவற்றிற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

சென்னை மாநகரில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு அங்காடிகள் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு கடைகள் வீதம் ஒவ்வொரு பொருளுக்கும் இரண்டு விலை விவரங்கள் (Quotations) சேகரிக்கப்பட்ட விலைப் பட்டியல்கள், 4 வாரங்கள் கொண்ட திங்கள் ஒன்றுக்கு, உணவுப் பொருட்களுக்கு மட்டும், 1,600 விலைவாசி விவரங்கள் கொண்டதாகும்.

இந்த விலைவாசி விவரங்களைச் சென்னை மாநகரில் உள்ள இந்திய அரசு அதிகாரிகள் சரி பார்க்கின்றனர். குறியீட்டு எண்களை இறுதியாக முடிவு செய்யும் பொறுப்பு இந்திய அரசைச் சார்ந்த சிம்லாவிலுள்ள தொழிலாளர் நலக் கழகத்தின் இயக்குனரைச் சார்ந்ததாகும். தொழிலாளர் நலக் கழகத்தின் இயக்குநரிடமிருந்து அதிகாரபூர்வமான தகவல் கிடைத்தவுடன் இக் குறியீட்டு எண் மாநில அரசால் வெளியிடப்படுகின்றது.

1971 டிசம்பர் திங்களில், சென்னை மாநகர நுகர் பொருள் குறியீட்டு எண் 895 ஆக இருந்தது. இது 1972 ஜனவரியில் 923 ஆக அதிகரித்தது. சட்டபூர்வமான அரிசி விற்பனை இல்லாமையாலும் பண்டிகை, திருமண விழாக்களை முன்னிட்டும், உணவுக்கான எண்ணெய்கள், மிளகாய் ஆகியவற்றின் விலைவாசிகள் அதிகமாகியதும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

நானூற்று எண்பத்து நான்கு நியாய விலைக் கடைகளி அரிசி மலிவான விலையில் வழங்கப்பட்டதால் 1972 பிப்ரவரித் திங்களில் இக் குறியீட்டு எண் 885 ஆகக் குறைந்தது. சர்க்கரையும் இம்மாதிரியே வழங்கப்பட்டன. உணவுக்கான எண்ணெய்கள், காய்கறிகள், மிளகாய் முதலியவற்றின் விலைகளும் அதிகப்படியான வரத்தின் காரணமாகக் குறைந்தன.

டிசம்பர் 1970-லிருந்து இக் குறியீட்டு எண்ணின் போக்கை கவனிக்கும் போது, இவ்வெண் 828-லிருந்து 1971 டிசம்பரில் 895 ஆக 67 புள்ளிகள் அதிகமாகியுள்ளது. 1971 ஜனவரியிலிருந்து 1972 ஜனவரி வரை இவ்வெண் 823-லிருந்து 923 ஆக 100 புள்ளிகள் உயர்ந்துள்ளது. 1971 பிப்ரவரியிலிருந்து 1972 பிப்ரவரி வரை இவ்வெண் 819-லிருந்து 885 ஆக 66 புள்ளிகள் உயர்ந்துள்ளது.

இக் குறியீட்டு எண் டிசம்பர் 1971-லிருந்து ஜனவரி 1972-இல் 28 புள்ளிகள் உயர்ந்தது. 1972 பிப்ரவரியில் 38 புள்ளிகள் குறைந்துள்ள போதிலும், 1971 டிசம்பர் புள்ளியுடன் ஒப்பிடின் 1972 பிப்ரவரியில் இவ்வெண் 10 புள்ளிகள்தான் குறைந்திருப்பதும் 1971 பிப்ரவரியுடன் ஒப்பிடின் 66 புள்ளிகள் உயர்ந்திருப்பதும் புலனாகும்.

மத்திய அரசினரால் கணிக்கப்படும் இப் புதுத் தொடர் குறியீட்டு எண்ணில் அரிசியின் விலை கணிக்கப்படும் முறை வருமாறு :—

> அரசினரால் நியாய விலைக்கடைகளின் மூலம் வினியோகிக்கப் பட்ட அளவையும், வெளிச்சந்தையில் வாங்கப்படும் அளவையும், தொழிலாளர் குடும்பத் தேவையில் இவ்விரு அங்காடிகள் மூலம் பெறப்படும் அளவின் அடிப்படையில் விகிதாச்சாரம் கணித்து, இவ்விரு அங்காடிகளிலும் நிலவும் விலைகளைக்கொண்டு நிறையிட்ட சராசரி விலை (Weighted average price) கணிக்கப்படுகிறது. இவ்விகிதாச் சாரம் 1972 பிப்ரவரியில் நியாயவிலைக் கடைகள் மூலம் 19 சதவிகிதமும், வெளிச் சந்தையில் 81 சதவிகிதமுமாக நிறையிட்ட சராசரி அரிசி விலை கிலோவிற்கு ஒரு ரூபாய் 20 காசாக கணிக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கைச் செலவு குறியீட்டெண்ணை மாநில அரசு திரட்டி மத்திய அரசின் சிம்லாவிலுள்ள தொழிலாளர் நலக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறது. அதுபோலவே மத்திய அரசின் சார்பிலும் மாநிலத்திலிருந்து சரி பார்த்து நேரடியாக விவரம் அனுப்பி வைக்கப்படுகிறது. இவைகளை யெல்லாம் ஆராய்ந்து இறுதியாக குறியீட்டெண்ணை கணித்து அதிகார பூர்வமாக மத்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பி வெளியிடச் செய்கிறது. ஆக்வே வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் கணிப்பதில் மாநில அரசுக்கு நேரடியான அதிகாரம் கிடையாது. அதுமட்டுமல்லாமல் வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் கணிப்பதில் எவ்விதத் தவறும் ஏற்பட வில்லையென்பதையும் தெளிவாக்க விரும்புகிறேன்.

Dr. H. V. HANDE: Sir, may I know from the Hon. Minister whether it is not a fact that a large number of workers in Tamil Nadu are very much discontented because the cost of livining index as published by the Statistics Department and the real state of affairs in Tamil Nadu are entirely different ? The price of rice, dhall and other

necessaries of life has gone up. In view of this, may I know what steps the Hon. Minister is going to take to see that there is no reduction in the Dearness Allowance as a result of the reduction in the cost of living index. As both the cost of living index and the real state of affairs are at variance, what steps he is going to take to rectify the mistake.

Even yesterday it was publisehd in "The Mail" that the Hon. Deputy Minister for Industrial Development made a statement in the Lok Sabha on 22nd March that the average wholesale consumer price index has been steadily going up and that the price of food-grains and other items like sugar have gone up. Now the Hon. Minister has stated that this is the entire responsibility of the Central Government. Most of us know that the cost of living index has really gone up and so there is something radically wrong with the Statistics Department. Therefore, may I know whether it is possible for the Hon. Minister to review the whole position and appoint even a Committee to go into the matter and satisfy the lakhs of workers who are very much discontented ? Also, as there is a lot of agitation going on outside, will it be possible for the Hon. Minister to find out a solution to the whole problem ?

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 1936இல் வாழ்க்கைப்புள்ளி 100 என்கிற அடிப்படையில் 71 டிசம்பரில் 895 ஆக இருந்த வாழ்க்கைப் புள்ளி குறியீட்டு எண் 1972 பிப்ரவரியில் 885 ஆக குறைந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வாழ்க்கைப் புள்ளியை அடிப்படையாக வைத்தே இன்றையதினம் தொழிலாளர்கள் பஞ்சப் படியைப் பெறுகிறார்கள். அதன் காரணமாக முதல் மாதம் வாங்கியதைவிட இந்த மாதம் பஞ்சப்படி அவர்களுக்குக் குறைந்துவிடுகிறது. உண்மையில் வாழ்க்கையில் எந்தப் பண்டங்களின் விலையும் குறையவில்லை. இந்தப் புள்ளியைக் கணிப்பதில் மாநில அரசுக்கு நேரடியான அதிகாரம் கிடையாது. என்றாலும் நாம் கொடுக்கிற புள்ளியை வைத்துத்தான் சிம்லாவில் உள்ளவர்கள் நிர்ணயிக்கிறார்கள்.

முற்பக 10-

இம்மாதிரி முன்பு ஒருமுறை வாழ்க்கைப் புள்ளியைத் தயாரிப்பதில் தவறு நடந்து, அதை விசாரிக்க சண்முகசுந்தரம் அவர்களை விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போதும் தயாரிக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரம் சரியல்ல. தவறு நடந்திருக்கிறது என்கிற காரணத்தினால் ஒரு தனிக் கமிட்டியோ, தனி அதிகாரியைப் போட்டோ டைரெக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ்—அவர் கீழ் பணியாற்றக்கூடிய சிப்பந்திகள் எந்தமுறையில் இதை இப்படி தவறாகக் கணக்கிட்டுக் குறைத்திருக்கிறார்கள் என்பதை விசாரணை நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எனக்கு முன்பாக பேசிய இரண்டு பேர்களும் சொன்னதுபோக மற்றொரு கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

வாழ்க்கைப் புள்ளி சற்று கீழே விழுந்திருப்பதைத் தெரிவித்தார்கள். நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசி, சர்க்கரை மலிவானவிலையில் வழங்கப்பட்டதால் இந்தப் புள்ளி குறைந்திருப்பதாகச் சொன்னார்கள்.

நம் எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக நாம் கொடுப்பது அவர்களுடைய தேவையில் நான்கில் ஒரு பங்கு, ஐந்தில் ஒரு பங்கு கூட இல்லை. பாக்கியை அவர்கள் வெளி மார்க்கெட்டில் தான் வாங்கிக்கொள்ள வேண்டியதாக இருந்து வருகிறது. இதைக் கணக்கில் கொண்டு சிறப்பங்காடி இல்லாத இடங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வெளி மார்க்கெட்டில் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்கள் வாங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்து வெளிமார்க்கெட் விலையில் வாழ்க்கைப் புள்ளி தயாரிக்காதது பெரிய தவறாகியிருக்கிறது. இதன்காரணமாக பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை வந்திருப்பதை உணர்ந்து இதை ரத்து செய்ய அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது சிறப்பு அங்காடிகள் மூலமாகபொருள்கள் விநியோகிக்கப்படுகிறதனால் அங்குள்ள விலைகள் அடிப்படையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப் பட்டதாகச் சொன்னார்கள். இன்றையதினம் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் சிறப்பு அங்காடிகளில் பண்டங்கள் வாங்குவது கிடையாது. பொதுமார்க்கெட்டில்தான் ஏராளமான பேர்கள் வாங்கு கிறார்கள். சிறப்பு அங்காடிகளுக்கும், பொது மார்க்கெட்டுக்கும் விலையில் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது. அப்படி இருக்கிற நிலையில் சிறப்பு அங்காடிகளின் விலை அடிப்படையில் புள்ளிவிவரங் கள் சேகரிக்கப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு பொதுமார்க்கெட்டில் பண்டங்கள் வாங்கி வருகிற தொழிலாளர்களுக்கு எல்லாம் பஞ்சப் படியில் இருபது ரூபாய், முப்பது ரூபாய் குறைந்து அதன் காரண மாக அவர்களது வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் புள்ளிவிவரங்கள் சேகரிக்கிறவர்கள் அப்ராக்சிமேட்டாகப் போட்டு புள்ளி விவரத்தை தயாரித்துவிடுவதால் கஷ்டப்படுகிறவர்கள் இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களாக இருக்கிறார்கள். நியாய விலைக்கடைகள் மூலம் அரிசி, சர்க்கரை விநியோகிக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல இடங்களில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படவேயில்லை. இந்த அடிப் படையில் கணக்கு எடுத்திருப்பது சரியானது அல்ல. இந்தத் தவறைத் திருத்தி சரியான புள்ளிவிவரத்தைக் கொடுத்து அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள இந்த அரசு இனியாவது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எல்லா மாநிலங்களிலும் இது போல் உயர்ந்திருக்கிறதா என்று கேட்டார்கள். அண்டை மாநிலக் குறியீட்டெண் போக்கை கவனிக்கும்போது ஆலப்புழையில் குறியீட்டெண் சென்னை மாநகரக் குறியீட்டெண்ணை ஒட்டியிருக்கிறது. 1971 டிசம்பரில் 895 லிருந்து 1972 ஜனவரியில் 923 ஆக 28 புள்ளிகள் உயர்ந்து பின்னர் 38 புள்ளிகள் சரிந்து 1972 பிப்ரவரி யில் 885 ஆகியது. பெங்களூரிலும், ஐதராபாத்திலும் அந்த எண் 1972 பிப்ரவரியில், 1972 ஜனவரிக்கு ஒப்பிடுகையில் குறைந்திருக் கிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் மாண்புமிகு உறுப்பினர் குமாரசாமி அவர்கள் தெரிவித்தார்கள், இதிலே தவறு ஏற்பட்டிருப்பதாகவும், அந்த முறையை மாற்றவேண்டும் என்று பொருள்படும்படி பேசினார்கள். வாழ்க்கைப்புள்ளி குறைந்தால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை இந்த அரசு அனுதாபத்துடன் கவனிக்கிறது. ஆனால் ஒரு முறையைத் தீர்மானித்து வாழ்க்கைப் புள்ளி எண் உயரும்போது குறியீட்டெண் வெளியிடுவதில் கோளாறு ஏற்பட்டதாக யாரும் சொல்லவில்லை. குறையும்போது கோளாறு ஏற்பட்டதாக சொல்வது சரியாகாது என்பது என்னுடைய எண்ணமாகும். தவிரவும் இந்த முறையை மாற்றுவதற்கு மாநில அரசுக்கு அந்த அதிகாரமில்லை. இந்திய அரசு அந்த முறையை வகுத்து தந்தது. அதுபோல் மாநில அரசு புள்ளி விவரம் சேகரித்துக் கொடுக்கிறது.

அது மட்டுமல்ல. இந்திய அரசும் அவர்கள் ஒருகுழு வைத்து, மாநிலத்தில் புள்ளிவிவரம் சேகரிப்பது போல் அந்த அடிப்படையில் அவர்களும் சேகரித்து, இரண்டையும் வைத்து அவர்களிடமிருந்து உத்திரவு வருகிறதே தவிர, மாநில அரசு மட்டுந்தான் இங்கேயுள்ள விவரத்தைச் சேகரித்து அனுப்புகிறது என்று கனம் உறுப்பினர்கள் எண்ணுவது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அந்த முறையை மாற்ற வேண்டும் என்று இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. நான் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். அதற்கு மாநில அரசுக்கு அதிகாரமில்லை. மத்திய அரசு தான் மாற்ற வேண்டிய பொறுப்பில் இருப்பதால் அதை விட அதிகம் ஒன்றும் சொல்வதற்கில்லை. தனி அதிகாரியை வைத்து பரிசீலிக்கவேண்டும் என்பதற்கு அவசியமில்லை என்றே கருதுகிறேன். இப்போது குறியீட்டெண் குறைந்துள்ளதன் காரணமாக தவறு ஏதுமில்லை. தொழிலாளர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதை கனம் உறுப்பினர்களைப் போலவே இந்த அரசும் அனுதாபத்துடன் உணர்கிறது. ஆனால் நாம் வகுத்துக் கொண்ட ஒரு முறையிலிருந்து மாற்றுவதற்கு எவ்வித அதிகாரமும் மாநில அரசுக்கு இல்லை என்று சொல்லி இந்தப் பிரச்னையை நான் முடிக்க விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் கேட்பதெல்லாம் மார்ச் மாதம் 2-ம் தேதி பார்லிமெண்டில் டெபுடி மினிஸ்டர் ஒரு அறிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் மிகத் தெளிவாக இது ஜாஸ்தியாக இருக்கிறது.

The price index of food grains, base 1961–62, was 208. After slightly receding to 206 in 1970–71, it rose to 214·8 in 1971–72 up to 4th March 1972.

என்று கூறி இருக்கிறார். ஆகவே பார்லிமெண்டில் மத்திய அரசாங்கம் என்றால், அது ஜாஸ்தியாக இருக்கிறது என்றும், தமிழகத்திற்கு வரும்போது அது குறைந்திருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. வெளியே உள்ள நிலைமைக்கும், இங்கே சொல்லும் கருத்துக்கும் வேற்றுமை இருக்கிறதே ; இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்களே ; ஆம்லாவுக்கு வந்த பிறகு பார்க்கும் செய்திகளை நான் சொல்கிறேன்—அல்லது முதலாளிறகு

சிம்லாவுடன் தொடர்பு கொண்டு அதை மாற்றுவதற்கு முயற்சிக் கிறார்களா? இந்த மாதிரி சந்தேகம் தொழிலாளர் மத்தியில் இருப்பதால் - திட்டவட்டமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம்—இன்று கடைசி நாள்; விவாதிக்க முடியாது—உடனடியாக ஒரு குழு நியமித்தால் "காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ்" சரியாக இருக் கிறதா, இல்லையா? என்று அரசாங்கத்திற்கு ஒரு திருப்தி அளிக்கும் அளவிற்கு நிலைமை உருவாகும். இல்லாவிட்டால் தொழிலாளர்களுக்குப் பரவலாக அதிருப்தி வளர்ந்து கொண்டு போகுமே, ஆகவே சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மாதிரி புள்ளி விவரத்தில் தவறு ஏற்பட்டது என்பது **It is a fraud on the prepartion of cost of living Index.**

தமிழில் சொல்வதென்றால் "ஃப்ராடுக்கு" மோசடி என்று தான் சொல்ல வேண்டியிருக்கும். ஏற்கெனவே மகாராஷ்டிராவில் இம்மாதிரி புள்ளி குறைந்த காரணத்தால் "லக்டாவாலா" கமிட்டி போட்டு, 29 புள்ளி கள் வரை தவறாக இருக்கிறது என்று சொல்லி, அதன் பேரில் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்குப் பணம் கிடைத்தது. அது போல் குஜராத்திலும் கிடைத்தது. இங்கும் ஒரு கமிட்டி போட்டோம். 13 புள்ளிகள் வரை குறைந்திருக்கிறது என்று கண்டு ஒரு 10 ஆண்டுக் காலமாகத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய 400 ரூபாய் இன்றைக்கும் கிடைக்காமல் இருக்கிறது. இம் மாதிரியான தவறான பிரச்னை வருகிற போது—அதற்காக யாரையும் குறைத்துச் சொல்லவில்லை—டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டு பரிசீலனை செய்தாலும் அதில் வெகு திறமையாக இருக்கக் கூடிய, 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' எம்.ஏ., பி.ஏ., படித்தவர்களுக்கு அங்கு பங்கு காணோம். மற்றவர்களுக்கு பங்கு இருக்கும் காரணத்தால், தனி அதிகாரி ஒருவரைப் போட்டு பரிசீலனை செய்து, 3 மாதத்திற்கு பிறகாவது சொல்லட்டும். 2, 3 மாதத்தில் பரிசீலனை செய்ததில் காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ் தயாரிப்பதில் முறைகேடுகள் இருந்தன என்பது போன்ற கருத்துக்கள் சொன்னால்—நமக்கு இங்கேயிருந்து அனுப்பக் கூடிய விவரங்கள் சரியாக இருக்குமென்ற காரணத்தால்—மீண்டும் ஒரு முறை சொல்கிறேன்—சர்க்காருக்கு அப்பாற்பட்ட சிறப்பான "ஸ்டாடிஸ்டீஷியன்ஸ்" இருக்கிறார்கள். அவர்களை வைத்து விசாரணை நடத்துவது உதவிகரமாக இருக்கும் என்பதால் அதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நண்பர் கே. டி. கே. அவர்கள் சொன்னது போல் புரொபசர் சண்முகசுந்தரம் தலைமையில் போடப்பட்ட குழு காஸ்ட் ஆப் லிவிங்ஸ் இண்டெக்ஸை எந்த தேதியிலிருந்து மாற்றி அமைப்போம் என்று அறிக்கை தந்தார்கள். அது தனி விஷயம். காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ் குறைந்திருக்கும் ஒரு காரணத்தால் "மோசடி" என்ற வார்த்தையை எதிர்க்கட்சித் தலைவர்கள் உப யோகப்படுத்துவது சரியல்ல.

Thiru K. T. K. Thangamani: I would like to know the exact amil equivalent for fraud.

மாண்புமிகு திரு செ. மாதவன்: 'ஃபராட்' என்று சொல்வது சரியல்ல. இப்படிப்பட்ட அபிப்பிராயத்தை வெளியே பரப்புவது தொழிலாளர்களிடத்தில் தப்பெண்ணத்தை ஏற்படுத்தும்.

Tthiru K. T. K. Thangamani: It is legal terminology. As a lawyer he will alro appreciate that fraud does not mean 'mosadi').

மாண்புமிகு திரு செ. மாதவன்: டாக்டர் ஹாண்டே 'எனக்கு நம்பிக்கை வரவில்லை' என்று சொல்கிருர்கள். இதை நாம் தொழிலாளர்களிடத்தில் நல்ல முறையில் விளக்கும் மனப் பக்குவம் இருந்தால் இப்படிப்பட்ட எதிர்வாதம் வராது என்று கருது கிறேன்.

ஏராளமாக புள்ளி விவரம் அமைச்சர் அறிக்கையில் இருக்கிறது. ஒன்றை மட்டும் எடுத்துப் பார்த்தோமானுல், 1971 டிசம்பர், 1972 ஜனவரி, இந்த ஒரு மாதத்துக்குள் 28 புள்ளி அதிகமாகி இருக்கிறது. பிப்ரவரியில் 38 புள்ளி குறைந்திருக்கிறது. "ஸ்டெப் ரைஸ் அண்ட் ஸ்டெப் ஃபால்," பக்கத்து பக்கத்து மாதத்தில் வருகிறது. சிலர் சொல்வது போல் அந்த வாதம் உண்மையாக இருந்தால், "டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ்" தவறு செய்கிருர்கள் என்பது உண்மையானுல் 28 புள்ளி உயர்த்தி இருப்பார்களா? நிச்சயமாக செய்யமாட்டார்கள். நம்முடைய அதிகாரிகள் வேண்டுமென்றே செய்ததாகச் சொல்வது சரியல்ல. பொதுவாக இதைப் பற்றி எப்படி செய்வது என்று புதிய முறையில் ஆலோசிக்க வேண்டும். ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு அடிக்கடி கூடுகிறது. கூடி இந்த காஸ்ட் ஆப் லிவிங் இண்டைக்ஸைப் பொறுத்தவரை வாதம் செய்கிறது. தொழிலாளர் தலைவர்கள் வாதம் செய்து புதிய ஆலோசனைகள் சொன்னுல் அதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஒரேடியாக மோசடி என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்னொரு வாதம். நியாயவிலைக் கடைகளில் போடும் விலையை மட்டும் வைத்து கணக்குப் போட்டு இப்படி வரு கிறது என்ற வாதம் சொல்லப்பட்டது. அதற்கும் அமைச்சர் அறிக்கை யில் தில் இருக்கிறது. 19 சதவிகிதம் நியாயவிலைக் கடைகளில் கணக்கெடுக் கிறேம். 81 சதவிகிதம் மார்க்கெட் பிரைஸ் எடுத்துக் கொள்கிறேம். இரண்டையும் கணக்கில் கொண்டு பொதுவாகப் புள்ளி தயாரிக்கப்படு கிறது. நியாயவிலைக் கடை விலையை மட்டும் எடுத்துக் கொள்ள வேண் டும் என்பது தவறுகும். நியாய விலைக் கடை விலையை எடுத்துக் கொள்ளக் கூடா தென்றுல், மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. சட்டப்படி சரியாக வராது. மத்திய அரசாங்கத்துக்கும் நமக்கும் உள்ள தொடர்பை விளக்கினேன். நாம் விலைப் பட்டியல் தயாரிக்கிறேம். அதை மத்திய அரசாங்க அலுவலர்கள் சரியாக இருக் கிறதா **என்று** பார்த்து இரண்டும் சிம்லாவிற்கு அனுப்பப்படுகிறது. அவர்கள் அறிக்கை தயாரிக்கிருர்கள்.

முதலாளிகள் சேர்ந்து சிம்லா நிறுவனத்தில் மோசடி செய்துவிட்டார் களா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். அது பார்லி மெண்டில் கேட்கப்பட வேண்டிய கேள்வி. ஆனுல் நம்முடைய **அரசாங்**

கத்தைப் பொறுத்தவரை அந்த மோசடிக்கு முதலாளிகள் ஆக்கிரமிப்புக்கு—அக்கிரமத்துக்கு—இடமளிக்க அரசாங்கம் தயாராக இருக்காது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் அவர்கள் இதைப் பற்றி அறிவித்திருப்பார்களானால் நாங்கள் அதைப் பற்றி பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம். மொத்தமாக காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி நாடாளுமன்றத்தில் புள்ளி விவரம் கொடுக்கப்பட்டது. பொதுவாக உயருகிறது என்று சொல்லி இருப்பார்களானால்—அவர்கள் தந்த அறிக்கைக்கு—இதற்கு நாம் பரிகாரம் காண முடியாது. அவர்கள் தான் பரிகாரம் காண வேண்டும்.

சென்னையிலே காஸ்ட் ஆப் லிவ்விங் இண்டெக்ஸ் அதிகப்படுத்தியிருக்கிறது என்று சொல்லியிருந்தால் நிச்சயமாக அதைப் பற்றி பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது. அப்படிச் சொல்லவில்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஆலப்புழையை எடுத்துக் கொண்டால், கேரளத்திலே கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் அங்கே மோசடி என்று நான் சொல்ல மாட்டேன், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் அப்படிச் சொல்ல மாட்டார்கள். அங்கே கூட இந்த மாதம் 22 புள்ளி சரிந்திருக்கிறது. அது தவறு என்று நான் சொல்லவில்லை. சில இடங்களிலே விலை ஏற்றத் தாழ்வு உணவுப் பொருள்களிலே ஏற்படுவதால் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. ஆகவே, நிச்சயமாக அடுத்த மாதம் வரப் போகிறது, பார்க்கப் போகிறோம். அதற்கடுத்த மாதம் வரப் போகிறது பார்க்கப் போகிறோம். நிச்சயமாக எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்னதை யெல்லாம் தொழிலாளர் தலைவர்கள் சொன்னதையெல்லாம் தொடர்ந்து இந்த அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. முதலமைச்சர் அளவிலே, நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களும் சொன்னதும், அதிகாரிகளை உடனடியாக விசாரித்தோம்,. எனவே தனி அக்கறை காட்டியிருக்கிறது. இப்படி ஸ்டீப் ஃபால், ஸ்டீப் ரைஸ் வேறு காரணத்தால், உண்மையான காரணத்திற்கு அல்லாது வருவதற்கு இந்த அரசாங்கம் அனுமதிக்காது. தொடர்ந்து விஜிலென்டாக இருக்கும். ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டிலே விவாதிப்பதிலே தயக்கம் இல்லை. ஆனால் புள்ளி விவரப்படி சரியாகக் கொடுக்கவில்லை என்றால், பல மாதங்களிலே 66 புள்ளி, 100 புள்ளி இப்படியெல்லாம் மாறுதல் ஏற்படுகிறது. 71-இலிருந்து 72 வரையில் 100 புள்ளி உயர்ந்திருக்கிறது. 66 புள்ளி உயர்ந்திருக்கிறது, போன மாதமே 28 புள்ளி உயர்ந்திருக்கிறது. ஆகவே, இந்த மாதம் மட்டும் பிப்ரவரி மாதம் மட்டும்தான் 38 புள்ளி குறைந்திருக்கிறது. நிச்சயமாக, இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டு தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படும் சூழ்நிலையைச் செய்ய இந்த அரசாங்கம் ஒருகாலும் விட்டுவிடாது என்பதை மட்டும் எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு உறுதி தந்து, தொடர்ந்து பரிசீலிக்கப்படும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் யாருக்கும் அஞ்சாது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் அளவிலே இதை யெல்லாம் தொடர்ந்து நாங்கள் பரிசீலிப்போம் என்பதை மட்டும் உறுதி கூறி இதோடு இந்தப் பிரச்சனையில் அவர்கள் அரசாங்கத்தின் விளக்கத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலே முடித்துக்கொள்கிறேன்.